பாடம் 4

# தூதனின் முகம்போல

***ஆலயத்தில் போதகர் கூறியதைக்கேட்டு அக்னஸூம், ஏஞ்சலும் பழங்களையும் உணவுப்பொருட்களையும் எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்று, அங்கே சுகமில்லாமல் படுத்திருந்த தங்கள் சபை அங்கத்தினரிடம் அவற்றைக் கொடுத்தார்கள். சுகமற்றிருந்தவரின் முகம் மகிழ்ந்தது. அக்னஸ், ஏஞ்சலின்போலவே ஆதித் திருச் சபை மக்கள் செயல்பட்டதைப் பார்ப்போமா?***

சபையில் புதிய விசுவாசிகள் சேர்ந்து கொண்டேயிருந்தார்கள். எனவே, 12 சீடர்களும் இயேசுவின் அன்பை மிகவும் ஊக்கமாய் மக்களிடம் சொல்லி ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

தங்களது விதவைகள் நன்றாகக் கவனிக்கப்படவில்லையென்று கிரேக்கர்கள் சீடர்கள்மேல் குற்றஞ்சாட்டினார்கள். அப்போது 12 சீடரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்தனர். பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றுள்ள 7 பேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றனர். சபையோர் யாவருக்கும் இந்த யோசனை பிடித்திருந்தது.



அப்போஸ்தலர்களால் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஏழுபேரில் ஒருவர் ஸ்தேவான் என்பவர். அவர் விசுவாசமும் வல்லமையும் மிக்கவர். இயேசுவால் மக்களுக்குள் அவர் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தார். சபையார் அவரை மிகவும் நேசித்தார்கள்.

இயேசுவைப்பற்றி ஸ்தேவான் வல்லமையாய்ப் பேசுவது பிரதான ஆசாரியருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் எரிச்சலாக இருந்தது. எனவே, ஸ்தேவானின்மேல் பொய்க் குற்றம் சாட்டத் தீர்மானித்தார்கள். ஆலோசனைச் சங்கத்தின் முன் அவரை நிறுத்தினார்கள்.

‘தேவனுடைய

## மனன வசனம்

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபிரெயர் 10:25.**

ஆலயத்தைக்குறித்தும், மோசேயின் கட்டளையைக் குறித்தும் விரோதமாகப் பேசினான்' எனப் பொய்க் குற்றம் சாட்டினார்கள்.

ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த யாவரும் ஸ்தேவானைப் பார்த்தனர். ஸ்தேவானின் முகம் தேவ தூதன் முகம் போலிருக்கக் கண்டனர்.

பிரதான ஆசாரியன், ஸ்தேவானிடம் விசாரித்தார். அப்போது ஸ்தேவான், நம் முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதியை முதலில் நினைவு படுத்தினார். பின்னர் ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோரையும் யோசேப்பின் மூலம் எகிப்தில் இஸ்ரவேலர் குடியேறியதையும் கூறினார்.

பின்னர் திரளாய்ப் பெருகின இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசே மீட்டு வந்ததைக் கூறினார். தேவனிடமிருந்து 10 கற்பனையைப் பெற்றுத் தந்தவரும் இவரே. ஆயினும் இஸ்ரவேலர் தேவனுக்கும் மோசேக்கும் கீழ்ப்படியாமல் வணங்காக் கழுத்துள்ளவர்களாகச் செயல்பட்டார்கள். சிலைவழிபாட்டைச் செய்தார்கள். பின் யோசுவாமூலமாக தேவன் இஸ்ரவேலரை வழி நடத்தினார் என்றார் ஸ்தேவான்.

மேலும் தாவீதுபற்றியும் சாலொமோன் கட்டின தேவ ஆலயம்பற்றியும் மிகவும் அழகாகக் கூறினார். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இஸ்ரவேலர் தேவனுக்குப் பிரியமற்று எதிர்த்து நின்று செயல்பட்டதையும் கூறிக்கொண்டே வந்தார்.

அவ்வாறே சொல்லிக்கொண்டே வந்தவர், "உங்கள் பிதாக்களைப்போலவே



## செய்தி


**விசுவாசத்தில் வளருவதற்கு விசுவாசிகள் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவேண்டும்.**

நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்போதும் எதிர்த்து நிற்கிறீர்கள். எந்தத் தீர்க்கதரிசிக்குத்தான் நீங்கள் கீழ்ப்படிந்துள்ளீர்கள்? எல்லாவற்றிற்கும் சிகரமாக நம்மை மீட்க வந்த தேவாதி தேவனாம்இயேசுவையே கொலை செய்துவிட்டீர்கள்'' என, இவ்வாறு ஸ்தேவான் பேசியதும், கோபத்துடன் தங்கள் பற்களைக் கடித்தார்கள்.

ஸ்தேவானோ வானத்தில் இயேசுவைக் காண்பதைக் கூறினார். அதைக் கேட்ட மாத்திரத்தில் அவரை இழுத்துச் சென்று கல்லெறிந்து கொன்றார்கள். அப்போதும் அவர்களை மன்னிக்குமாறு ஸ்தேவான் ஜெபித்தார். என் செல்லமே! நீயும் ஸ்தேவான் போல் இயேசுவுக்காக வாழ்வாயா?

### செய்முறை:

*அநேகர் இயேசுவைக் கண்டுகொள்ள ஸ்தேவான் உதவினார். ஆதி திருச்சபையின் வெற்றியைக் கண்டறிய , கீழே உள்ள கட்டத்தில் சரியான பாதையைக் காட்டும் எழுத்துகளை வட்டமிடு. பதிலைக் கோட்டில் எழுது.*




**புதிர் 4** _____ _____ _____ _____ _____